**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 39/மா/2023

**நாள்:27.10.2023**

திரு.சு.சுப்பராமன்,
தூத்துக்குடி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி – எதிர்மனுதாரர்

தூத்துக்குடி, பக்கிள்புரம், 10/1, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சு.சுப்பராமன் என்பவரின் 30.01.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.02.2023–ல் பெறப்பட்டு, 39/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தூத்துக்குடி, பக்கிள்புரம், 10/1, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சு.சுப்பராமன் என்பவர் தனது 30.01.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

அரசு ஆவணங்களில் தமிழ்நாடு அரசு என்று பதிவு செய்ய வேண்டுமென்று அரசு பல அறிவுரைகள் வழங்கியிருக்கிறது. ஆனால் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரும், மாவட்ட ஆட்சியரும் அரசின் அறிவுரைகளையும் புறக்கணித்துவிட்டு, தமிழக அரசின் அரசாணை என்று பதிவு செய்து அரசிதழ் வெளியிட்டுள்ளனர். தமிழக அரசின் அரசாணை என்று பதிவு செய்யப்பட்டுள்ள மேற்கண்ட தூத்துக்குடி மாவட்ட அரசிதழ் எண்.7/27.06.2022 மற்றும் அதன் அடிப்படையில் சொத்து வாரிதாரர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்புகளை ரத்து செய்ய வேண்டும்.

தமிழ்நாடு அரசின் ஆணை 53 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (M.A.IV) துறை நாள் 30.03.2022 என்று பதிவு செய்து புதிய அரசிதழ் வெளியிட வேண்டும். அதன் அடிப்படையில் சொத்து வாரிதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு ஆணை என்று பதிவு செய்து அறிவிப்பு கொடுக்க வேண்டும். மேற்கண்ட அரசுக்கு ஏற்பட்டுள்ள செலவு தொகையை

கணக்கிட்டு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு.செந்தில்ராஜ், IAS, மாநகராட்சி ஆணையர் திருமதி.சாருஸ்ரீ IAS ஆகியோர் மீது கீழ்க்கண்ட பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்து, அவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டும்.

Serious negligence and dereliction of duty, resulting in considerable loss to Government. " Tamilnadu Civil Services Discipline and Appeal Rules".

வார்டு 43, கதவிலக்கம் – பங்களா தெரு, 1, 1C. 2, 2A, 2B, 2B1, 2B2, 2B3, 2C, 2D ஆகியவற்றுக்கான உயர்த்தப்பட்ட 100 சதவிகித வரியை 16.12.2022–ல் மார்ச் 2023 முடிய செலுத்திவிட்டேன். ஆனால் நகராட்சி ஆணையர் நான் மேற்கண்ட கட்டிடங்களுக்கு வரி செலுத்தவில்லை என்றும், சொத்து பறிமுதல் செய்யப்படும் என்றும் 02.01.2023ல் அறிவிப்பு கொடுத்திருக்கிறார். இதனால் 80 வயதான எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டுள்ளது. உடல்பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளார். நான் வரி செலுத்திய விபரத்தைக்கூட சரி பார்க்காமல் அறிவிப்பு அனுப்பியுள்ளார். இது சம்மந்தமாக என்னுடைய ஆட்சேபனையை 03.01.2023ம் தேதி மாநகராட்சி ஆணையருக்கு தெரிவித்தேன். அதன் பிறகும் மேற்கண்ட அறிவிப்பை ரத்து செய்ய முடியாது என்று மாநகராட்சி ஆணையர் அவருடைய கடிதம் நாள் 13.01.2023ல் தெரிவித்து விட்டார். அதே சமயம் பல லட்சம் ரூபாய் பாக்கி வைத்திருப்பவர்கள் மீது எடுத்துள்ள நடவடிக்கை பற்றி ஆணையர் அறிக்கை வெளியிடவில்லை. சான்றாக: குடிநீர் வரி ரூ.21,99,375 பாக்கி வைத்திருக்கும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மேயர் திரு.ஜெகனின் தகப்பனார் திரு N.பெரியசாமி குடிநீர் கட்டணம் ரூ.46,470/– + 44,313/– = 90,783/– ஆகியோரின் குடிநீர் இணைப்பை துண்டிக்கவில்லை. சொத்தை பறிமுதல் செய்யவில்லை. ஆதாரம் மாநகராட்சியின் பொது தகவல் அலுவலர் கடிதம் அ1/4181/2022, 12.09.2022ல் வெளியிட்டுள்ள பட்டியலில் இருக்கிறது.

1. சொத்து வரி செலுத்திய பிறகும் சொத்து பறிமுதல் செய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்பு ரத்து செய்யப்பட வேண்டும்.
2. எனக்கு ஏற்பட்டுள்ள மன உளைச்சலுக்கு தகுந்த இழப்பீடு பெற்றுத்தர வேண்டும்.

என்னுடைய பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வார்டு 43 –2/1 பங்களா தெரு, கட்டிடம் 10,000 சதுர அடியில் இருக்கிறது என்று பதிவு செய்து அரையாண்டுக்கு ரூ.17,732/– வசூலிக்கப்பட்டது எனறும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் வெளியிட்டுள்ள மேற்கண்ட தூத்துக்குடி மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.7, 27.06.2022–ன் அடிப்படையில் 100 சதவிகிதம் வரி ரூ.35,464/– விதிக்கப்பட்டது என்று ஆணையர் 16.07.2022ல் தெரிவித்துள்ளார். மேற்கண்ட கட்டிடம் 5,000 சதுரடிக்குள் இருக்கிறது என்று தெரிவித்தேன். அதன் பிறகு ஆணையர் மேற்கண்ட கட்டிடம் 4,638 சதுரடியில்தான் இருக்கிறது என்று தெரிவித்த தேதி 28.11.2022. மேற்கண்ட கட்டிடத்திற்கு 2001ம் ஆண்டு முதல் 4,638 சதுரடிக்கு பதிலாக 10,000 சதுரடிக்கான வரி வசூலிக்கப்பட்டு வந்ததை ஆணையர் ஒப்புக்கொண்டுள்ளார். 4,638 சதுரடிக்கு மேற்கண்ட விகிதாச்சாரப்படி வசூலித்திருக்க வேண்டிய தொகை ஆண்டுக்கு ரூ.16,448/– அரசு ஆணை மற்றும் மாநகராட்சி ஆணையர் வெளியிட்டுள்ள மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.7ன்படியும் ரூ.16,448/– க்கு 100 சதவிகிதம் ரூ.32,896/– செலுத்துவதற்கு நான் சம்மதிக்கிறேன்.

2001ம் ஆண்டு முதல் தவறான வரி விதித்து, கூடுதலாக வரி வசூல் செய்த விபரம் ஆணையர் கொடுத்துள்ள 08.07.2022, 28.11.2022 அறிவிப்புகளின் மூலம் தற்போது தெரியவந்துள்ளது.

| | |
|---|---|
| 10000 சதுரடி என்று தவறாக குறிப்பிட்டு, 2001ம் ஆண்டு முதல் 1 ஆண்டுக்கு வசூலித்த தொகை | ரூ. 35,464/— |
| 4638 சதுரடிக்கு 1 ஆண்டுக்கு வசூலிக்க வேண்டிய தொகை | ரூ. 16,448/— |
| கூடுதலாக வசூலித்தது | ரூ. 19, 016/— |
| 21 ஆண்டுகளுக்கு வசூலித்த தொகை | ரூ.3,99,336/— |

மேற்கண்ட தவறுகள் பற்றி என்னுடைய 09.11.2022 முறையீட்டில் தெரிவித்திருக்கிறேன். சென்னை, நகராட்சி நிருவாக இயக்குனர் அவருடைய கடிதம் எண்.ஓ.மு.33759/ஆர்1/2022, நாள் 05.12.2022ல் உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் விபரத்தினை எனக்கு தெரிவிக்குமாறு நகராட்சி ஆணையருக்கு தெரிவித்துள்ளார். 20.12.2022ல் மீண்டும் மனு கொடுத்திருக்கிறேன். ஆனால் மாநகராட்சி ஆணையர் அவருடைய கடிதம் அ2/01603/2022 நாள் 06.01.2023, 26.12.2022ல் என்னுடைய கோரிக்கை ஏற்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். என்னுடைய கோரிக்கையை தகுந்த முறையில் பரிசீலிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்க வேண்டும்.

என்னுடைய மனைவி திருமதி.சு.விஜயலட்சுமி அவருடைய பெற்றோர்களுக்கு ஏக வாரிசு ஆவார். பெற்றோர்கள் இறந்த பிறகு வாரிசு அடிப்படையில் கீழ்க்கண்ட கட்டிடங்கள் திருமதி.சு.விஜயலட்சுமி பெயரில் பதிவு செய்யப்பட்டது.

தூத்துக்குடி மாநகராட்சி வார்டு 43

| | |
|---|---|
| தெருப்பெயர் | பங்களா தெரு, சிவந்தாகுளம் |
| கதவிலக்கம் | 1, 1C, 2, 2A, 2B, 2B/1, 2/B2, 2/B3, 2C,2/D,2-1 |
| தெருப்பெயர் | பக்கிள்புரம் |
| கதவிலக்கம் | 10/1 |

என்னுடைய மனைவி 07.02.2021ல் இறந்து விட்டார். அவருடைய பதிவு செய்யப்பட்ட உயில் ஆவண எண்.11/2012, 04.04.2012ன்படி முதல் வாரிசான என்னுடைய பெயரில் வரிவிதிப்பு பதிவேட்டில் பதிவு செய்யும்படி தகுந்த ஆவணங்களுடன் ஆணையருக்கு விண்ணப்பித்தேன். இன்றுவரை செயல்படாத பாதாள சாக்கடைக்கு பணம் கட்டினால்தான் தீர்வை ரசீதில் பெயர் மாற்றம் செய்யமுடியும் என்று தெரிவித்தார். இறந்து போன திருமதி சு.விஜயலட்சுமி பெயரில் தீர்வை ரசீது கொடுக்கப்பட்டது.

மதுரை மாநகராட்சி ஆணையர், இறந்து போனவரின் பெயரில் தீர்வை ரசீது கொடுத்த செயல் பற்றி உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பாணையில் கீழ்கண்டபடி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"Issuing receipts in the name of dead person makes the situation ridiculous" – Madurai Bench High Court WP(MD) No.14099 of 2009 dt. 15/11/2011.

நானும் மதுரை கிளை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பாணை எண். WP(MD) No.15130/2012 தேதி. 19.04.2017க்குப்பிறகு ஆணையர் என்னுடைய பெயரில் தீர்வை ரசீதுகளை மாற்றிக்கொடுத்தார்.

மேற்கண்ட தீர்ப்பாணைகளுக்குப் பிறகும், இன்றுவரை நடைமுறைக்கு வராத பாதாள சாக்கடைக்கு பணம் கட்டினால்தான் பெயர் மாற்றம் செய்யப்படும் என்ற நிலையை கடைபிடிக்கிறார்கள். வரிப்பதிவேட்டில் update பதிவுகள் இல்லை. இறந்தவர்களின் பெயர்களிலும், சொத்துக்கள் வரிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இதனால் வரித்தண்டல் சட்டப்படி (Revenue Recovery Act) நடவடிக்கை எடுக்க முடியவில்லை. பலகோடி ரூபாய் பாக்கி இருக்கிறது. மாநகராட்சியின் பொது தகவல் அலுவலர் அதற்கான ஆதாரங்களை அவருடைய 12.09.2022 கடிதத்தில் தந்திருக்கிறார்.

சொத்தின் உரிமையாளரின் சரியான பெயரை பதிவு செய்து வரித்தண்டல் சட்டப்படி நிலுவைத்தொகையை வசூலிக்க வேண்டும். நிலுவைத்தொகையை வசூலிக்கத் தவறிய மாநகராட்சி ஆணையர் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாலையில் மாநகராட்சியின் குப்பை சேகரிக்கும் வாகனத்தில் பொருத்தப்பட்டிருக்கும் மைக்–ஸ்பீக்கர் மூலமாகவும் மிகவும் சத்தமாக கீழ்கண்ட வாசகத்தை தெருக்களில் அறிவிக்கிறார்கள்.

1. உடனடியாக சொத்து வரி, குடிநீர் வரி செலுத்த வேண்டும்.
2. தவறினால் சொத்து பறிமுதல் செய்யப்படும். குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும்.

மேற்கண்ட செயல்பாட்டினால் கீழ்க்கண்ட பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

1. மாணவர்களால் படிக்க முடியவில்லை.
2. உடல் நலம் பாதிக்கப்பட்டவர்கள், என்னைப்போன்ற முதியவர்களின் தூக்கம் பாதிக்கப்பட்டுள்ளது.
3. காலையில் மதவழிபாடு/பிரார்த்தனைகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
4. அதிகாலையில் மேற்கண்ட வாசகத்தை கேட்கும் பொதுமக்கள் மிகவும் அபசகுனமாக கருதி பெரும் மனஉளைச்சலுக்கு உள்ளாகின்றனர்.

மேற்கண்ட அபசகுனமான அறிவிப்பினை உடனடியாக நிறுத்த வேண்டும். வரி பாக்கி வைத்திருப்பவர்களுக்கு மட்டும் தகுந்த, எழுத்துப்பூர்வமான அறிவிப்பு கொடுக்க வேண்டும்.

மாநகராட்சி ஆணையர் அனுப்பும் அறிவிப்புகளில் கீழ்கண்ட வாசகத்தை பதிவு செய்திருக்கிறார்.

" வரி செலுத்தப்படவில்லை என்றால் சொத்தை பறிமுதல் செய்வதற்கு கைப்பற்றாணை பிறப்பிக்கப்படும்"

தண்டனை விவரம் அறிவிப்புகளில் பதிவு செய்யக்கூடாது என்றும், சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றுதான் பதிவு செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் மற்றும் அரசு தெரிவித்திருக்கிறது.

மாநகராட்சி ஆணையர் பயன்படுத்தும் வாசகம் வரிதாரர்களை அவமானப்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது.

வரி செலுத்த தவறினால் சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற வாசகத்தை பதிவு செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பிக்க வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 20.02.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

3) தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தனது 15.03.2022 நாளிட்ட அறிக்கையில் கிழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 43 பங்களா தெரு சொத்து வரி விதிப்பு எண.138/043/901588ல் கதவு எண் 2/1 என்ற வணிக கட்டிடத்திற்குரிய சொத்து வரி பொது சீராய்வு பணி நிறைவுற்று சிறப்பு அறிவிப்பு வழங்கப்பட்டதில் கட்டிடத்தின் அளவு தவறாக குறிப்பிட்டிருந்ததால் சரியான அளவு குறிப்பிட்டு அதற்கான சொத்துவரித்தொகை குறைக்கக் கோரி மனுதாரரால் விண்ணப்பம் செய்யப்பட்டது.

அதன் அடிப்படையில் மனுதாரரின் கட்டிடம் இளநிலைபொறியாளர் (திட்டம்) அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர், உதவி வருவாய் அலுவலர், மண்டல உதவி ஆணையர் மற்றும் உதவி ஆணையர்(வ) ஆகியோர் அடங்கிய குழு பரிந்துரையின்படி ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று சரியான அளவு கணினியில் திருத்தம் செய்யப்பட்டு அதன் விபரம் மனுதாருக்கு தெரிவிக்கப்பட்டதுடன், 2022 சொத்துவரி பொது சீராய்வில் வணிக கட்டிடங்களுக்கு சதுரடி கணக்கிடாமல் 100 சதவீதம் 01.04.2022 முதல் சொத்துவரி உயர்த்தப்பட்டுள்ளது குறிப்பிட்டு சொத்துவரி பொதுசீராய்வு சிறப்பு அறிவிப்பில் இருந்த சதுரடி பதிவானது 2003ம் ஆணடு கணினி மயமாக்கும்போது ஏற்பட்ட தட்டச்சு பிழையே எனவும், கட்டிட அளவிற்கான மாதிரி சொத்துவரி கணக்கிட்டு படிவத்துடன் மாநகராட்சி கடிதங்களின்படி ஏற்கனவே மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சொத்துவரி கேட்பு அறிவிப்புகளில் உள்ள வாசகங்கள் மன உளைச்சல் ஏற்படுத்துவதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளதற்கு, கேட்பு அறிவிப்பு கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்ய இயலாத வகையில் சொத்துவரி செலுத்தப்படும் கால விபரங்கள் குறித்தும் கடிதங்களின் வாயிலாக மனுதாரருக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரருக்கு ஏற்பட்ட சந்தேகங்கள் அனைத்தும் நிவர்த்தி செய்துகொள்ள ஏதுவாக ஆணையர் அவர்களால் 17.03.2023 வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் தூத்துக்குடி மாநகராட்சி மைய அலுவலகத்திற்கு மனுதாரர் ஆஜராவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்ற விபரமும் சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 06.10.2023 அன்று திருநெல்வேலி முகாமில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.09.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**5) மனுதாரர் 06.10.2023 அன்று திருநெல்வேலி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:**

" இம்முறைமன்றத்தில் என்னால் அளிக்கப்பட்ட எனது முறையீட்டு மனு நாள் 30.01.2023ல் கண்டுள்ள விவரங்களையே எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பப்பட்ட 12.06.2023 நாளிட்ட கடிதத்தின் நகலையும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் என்னால் தொடரப்பட்ட வழக்கின் (WP(MD) No. 3592 of 2023 ) மீதான 22.02.2023 நாளிட்ட தீர்ப்பின் நகலையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6) தூத்துக்குடி மாநகராட்சியின் உதவி ஆணையர், உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வராக பணிபுரியும் இருவரும் 06.10.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர்.**

" தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண் 43 பங்களா தெரு கதவு எண்கள் 1, 1C. 2, 2A, 2B, 2B1, 2B2, 2C & 2D ஆகியவற்றிற்கான சொத்து வரி விதிக்கப்பட்டிருந்தது. மேற்கண்ட கதவு எண்களில் 2/1 என்ற வணிக கட்டடத்திற்கு சொத்துவரி சிறப்பு அறிவிப்பு வழங்கும்போது கணினியில் ஏற்பட்ட சிறு தவறு காரணமாகவும் எழுத்தரின் பிழையின் காரணமாகவும், மனுதாரரின் மண்டபத்திற்கு 4238 சதுர அடி என்பதற்கு பதிலாக 10,000 சதுர அடி என கணினியில் பதிவு செய்யப்பட்டு வரி விதிக்கப்பட்டு வந்தது. மனுதாரர் மேற்கண்ட தவறை சுட்டிக்காட்டியதன் பேரில் மேற்கண்ட தவறு சரி செய்யப்பட்டு மனுதாரரிடமிருந்து சரியான வரித்தொகையே வசூலிக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் இந்நேர்வு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனுதாரரால் வழக்கு தொடரப்பட்டு (வழக்கு எண்.WP (MD) No. 18180-2023) அதில் மாநகராட்சியால் எதிர்வாதுரை செப்டம்பர் 2023ல் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்கின்ற விவர்த்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் தூத்துக்குடி மாநகராட்சி துணை ஆணையரின் 05.10.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம். மேலும் இந்நேர்வு தொடர்பான ஆவணங்களின் நகல்களையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

**7) தூத்துக்குடி மாநகராட்சி துணை ஆணையர் தனது 05.10.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-**

" தூத்துக்குடி மாநகராட்சியில் சொத்துவரி பொது சீராய்வு 2023, பணிகள் நிறைவுற்று, உயர்த்தப்பட்ட சொத்துவரித்தொகை விவரம் பொதுமக்கள்

அறிந்துகொள்ளும் வகையில், கேட்பு அறிவிப்புகள் 03.11.2022 அன்று கணினியில் பதிவிறக்கம் செய்து பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. தூத்துக்குடி மாநகராட்சி வார்டு 43 பங்களா தெரு, கதவு எண்கள் 1, 1C. 2, 2A, 2B, 2B1, 2B2, 2C & 2D ஆகியவற்றிற்கான சொத்துவரித்தொகை 16.12.2022 அன்று மனுதாரரால் செலுத்தப்பட்ட வரியினங்களுக்கு, 16.12.2022க்கு பிந்தைய காலங்களில் நிலுவை இல்லாத சொத்துவரி கேட்பு அறிவிப்புகள் கணினியில் பதிவிறக்கம் செய்ய இயலாது எனவும் மனுதாரருக்கு அனுப்பிய கேட்பு அறிவிப்பு நாள் 25.11.2022. மனுதாரர் சொத்துவரி செலுத்திய தேதி 16.12.2022 ஆகும். சொத்துவரி செலுத்திய பிந்தைய நாளில் கேட்பு அறிவிப்பு இருப்பின் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் எனவும் ஒருவேளை தாமதமாக சொத்துவரி கேட்பு கிடைக்கப்பெற்றால் அவ்வறிவிப்பினை மனுதாரர் நிராகரிக்கலாம் எனவும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளிலும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மூலம் ஒரே சீரான மென்பொருள் வடிவமைக்கப்பட்டு அதில் கேட்புதொகை கட்டிட உரிமையாளர்களுக்கு தெரிவிக்கும் அனைத்து கேட்பு அறிவிப்பிலும் ஒரே மாதிரியான பதிவுகள் கீழ்கண்டவாறு உள்ளது:

> மேற்கண்ட தொகையை செலுத்தப்படாமலிருந்தால், ஏன் செலுத்தப்படவில்லை என்பதற்கு நீங்கள் தகுந்த காரணம் காட்டாத நிலையில் உங்களுடைய சொத்தை பறிமுதல் செய்வதற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சியின் சட்டம் 36வது பிரிவின்படி கைப்பற்றாணை பிறப்பிக்கப்படும். அப்படிப்பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு கைப்பற்றாணைக்கும் 12 காசுகள் வீதம் கட்டணம் விதித்து வசூலிக்கப்படும். மேற்கண்ட வரியும் கட்டணமும் பின்னரும் செலுத்தப்படாமலிருந்தால் சொத்து பறிமுதல் செய்யப்படும். 1920ம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சியின் சட்டம் 4வது அட்டவணையில் விதிகள் 30 முதல் 34 வரை பார்க்கவும்.
>
> குறிப்பு: சொத்துவரி அரையாண்டு ஆரம்பித்த 30 நாட்களுக்குள் அதாவது ஏப்ரல் முதல் செப்டம்பர் முடிய உள்ள முதல் அரையாண்டு வரி ஏப்ரல் மாதத்திற்குள்ளும், அக்டோபர் முதல் மார்ச் முடிய உள்ள இரண்டாவது அரையாண்டு வரி அக்டோபர் மாதத்திற்குள்ளும் செலுத்த வேண்டும்.

சொத்துவரி அறிவிப்பில் இடம்பெறும் வாசகங்கள் அடங்கிய அறிவிப்பு பெறுவதை கட்டிட உரிமையாளர்கள் தவிர்ப்பதற்கு சொத்துவரி மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய கால விபரங்கள் தெரிவிக்கப்பட்டு மனுதாரர், மன உளச்சலை தவிர்க்கும் பொருட்டு வரும்காலங்களில் முதல் அரையாண்டு சொத்துவரி தொகையினை ஏப்ரல் மாதத்திற்குள்ளும் இரண்டாம் அரையாண்டு சொத்துவரியினை செப்டம்பர் மாதத்திற்குள்ளும் செலுத்துமாறும் இவ்வலுவக கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டலம், வார்டு 43 பங்களா தெரு, சொத்துவரி விதிப்பு எண் 138/043/901588ல் கதவு எண் 2/1 என்ற வணிக கட்டிடத்திற்குரிய சொத்துவரி பொது சீராய்வு பணி நிறைவுற்று சிறப்பு அறிவிப்பு வழங்கப்பட்டதில் கட்டிடத்தின் அளவு தவறாக குறிப்பிட்டிருந்ததால் சரியான அளவு குறிப்பிட்டு அதற்கான

சொத்துவரித்தொகை குறைக்க கோரி மனுதாரரால் **12.12.2022, 20.12.2022, 18.01.2023** ஆகிய விண்ணப்பம் வரப்பெற்றதன் அடிப்படையில், மனுதாரரின் கட்டிடத்தினை மாநகராட்சி இளநிலை பொறியாளர்(திட்டம்) அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர், உதவி வருவாய் அலுவலர், மண்டல உதவி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் (வ) அடங்கிய குழு பரிந்துரையின்படி ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று சரியான அளவு கணினியில் திருத்தம் செய்யப்பட்டு அதன் விபரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதுடன், **2022** சொத்துவரி பொது சீராய்வில் வணிக கட்டிடங்களுக்கு சதுரடி கணக்கிடாமல் **100** சதவீதம் **01.04.2022** முதல் சொத்துவரித்தொகை உயர்த்தப்பட்டுள்ளது குறிப்பிட்டு சொத்துவரி பொதுசீராய்வு சிறப்பு அறிவிப்பில் இருந்த சதுரடி பதிவானது **2003**ம் ஆண்டு கணினி மயமாக்கும்போது ஏற்பட்ட தட்டச்சு பிழையே எனவும், கட்டிட அளவிற்கான மாதிரி சொத்துவரி கணக்கீட்டு படிவத்துடன் **26.12.2022, 06.01.2023, 24.01.2023** ஆகிய தேதிகளில் இதே எண்ணிட்ட கடிதங்களின்படி தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் **30.01.2023** அன்று இதே பொருளிட்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்து, முறைமன்றம் நடுவம் விசாரணை முடித்து ஆணை பிறப்பிப்பதற்கு முன்பே மனுதாரர் **18.02.2023** அன்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இதே பொருளில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு எண். WP (MD) No.3592 of 2023 நாள்.**22.02.2023** உத்தரவின்படி மாநகராட்சியால் எடுக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் மனுதாரருக்கு தெரிவித்ததுடன், தமிழ்நாடு அரசாணையின்படி தூத்துக்குடி மாவட்ட அரசிதழில் சொத்துவரி பொது சீராய்வு தெளிவுரைகள் வெளியிடப்பட்டு அதன் அடிப்படையில் பொதுசீராய்வு பணிகள் அனைத்தும் நிறைவுற்று பொதுமக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இம்மாநகராட்சியில் **30.03.2023**ம் தேதிவரை வசூல் இனத்தில் மட்டும் (அரசு கட்டிடங்கள் மற்றும் வழக்கு நிலுவையில் உள்ள இனங்கள் தவிர்த்து) **2022–23**ம் ஆண்டில் **82.28** சதவீதம் பொதுமக்களால் சொத்துவரி செலுத்தப்பட்டுள்ளது எனவும், மனுதாரரின் பிரதான கோரிக்கையான சொத்துவரி நிர்ணயம் மற்றும் பொதுசீராய்வு தொடர்பு இல்லாத கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்ற விபரமும் **30.03.2023** அன்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும் மனுதாரர் Cont. P.(MD) No.970 of 2023 in WP(MD) No.3592 of 2023ன்படி நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தார். மாநகராட்சி வழக்கறிஞர் வழியாக நீதிமன்றத்தில் வாதிடப்பட்டு மாநகராட்சியின் நடவடிக்கைகள் அனைத்தும் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்கொண்டு கூடுதல் உத்தரவுகள் தேவையில்லை என நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை முடித்து **14.06.2023** அன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

நீதிமன்றம் தெளிவுபடுத்திய பின்பும் **22.07.2023** அன்றைய தேதியில் இதே பொருளிட்டு W.P. (MD) No.18180 of 2023ன்படி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தற்போது மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கிற்கு மாநகராட்சி மூலம் சரியான சொத்துவரித்தொகையே நிர்ணயம் செய்து சொத்துவரி பொதுசீராய்வு செய்யப்பட்டுள்ள விபரத்துடன் வக்காலத்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு முதல் கட்ட விசாரணை துவக்கப்படாமல் நிலுவையில் உள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சி, தெற்கு மண்டலம், வார்டு 43 பங்களா தெரு, சொத்துவரி விதிப்பு எண் 138/043/901588ல் கதவு எண்.2/1 என்ற வணிக கட்டிடத்திற்குரிய சொத்துவரி நிர்ணயம் மற்றும் பொதுசீராய்வு சரியான முறையிலேயே உள்ளது என மாதிரி கணக்கீட்டு படிவத்துடன் பலமுறை மாநகராட்சியின் மூலம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சியின் செயல்பாடுகள் நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பும் மனுதாரர் மீண்டும் மீண்டும் ஒரே பொருளிட்டு கோரிக்கையை வைத்து வருகிறார். இதனால் மாநகராட்சியில் உள்ள பணியாளர்களின் மனித உழைப்பு, நேரம் மற்றும் அலைச்சல் வீணடிக்கப்படுகிறது.

மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் முறையிட்டு தீர்வு காணும் முன்பு நீதிமன்றத்தை மூன்று முறை நாடியுள்ளார். நீதிமன்றத்தில் மேற்படி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட விபரங்கள் ஏதும் முறைமன்ற நடுவத்திடம் தெரியப்படுத்தவில்லை.

தற்போதைய தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 100 மற்றும் விதி 271—ன்படி சொத்துவரியானது ஆணையரால் நிர்ணயம் செய்யப்பட்டது நிறைவடையாத நபரொருவரால் முன்னிடப்பட்ட மேல்முறையீடொன்றினைக் கேட்பதற்கு அல்லது முடிவு செய்வதற்கு மாநகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள வரிவிதிப்பு மேல்முறையீட்டு குழுவினை அணுக வேண்டும் என்பதால் மனுதாரர் முதல் கட்டமாக மாநகராட்சியின் வரிவிதிப்பு மேல் முறையீட்டு குழுவில் மனு செய்து உரிய தீர்வு மற்றும் பரிகாரம் தேடிக்கொள்ள மனுதாரருக்கு உத்தரவிடக்கோரி முறைமன்ற நடுவத்திடம் தூத்துக்குடி மாநகராட்சியின் மூலம் வேண்டுகோள் வைக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

8) **முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை, துணை ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையர், உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன**:

மனுதாரர் திரு.சு.சுப்பராமன் தனது மனுவில் குறிப்பாக கீழ்க்கண்ட புகார்களை குறிப்பிட்டுள்ளார்.

வார்டு 43, கதவிலக்கம் – பங்களா தெரு, 1, 1C. 2, 2A, 2B, 2B1, 2B2, 2B3, 2C, 2D ஆகியவற்றுக்கான உயர்த்தப்பட்ட 100 சதவிகித வரியை 16.12.2022—ல் மார்ச் 2023 முடிய செலுத்திவிட்டேன். ஆனால் நகராட்சி ஆணையர் நான் மேற்கண்ட கட்டிடங்களுக்கு வரி செலுத்தவில்லை என்றும், சொத்து பறிமுதல் செய்யப்படும் என்றும் 02.01.2023ல் அறிவிப்பு கொடுத்திருக்கிறார். இதனால் 80 வயதான எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டுள்ளது. உடல்பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளார் என்றும் வார்டு 43 –2/1 பங்களா தெரு, கட்டடம் 10000 ச.அடியில் உள்ளது என 2001 முதல் தவறான வரி விதிக்கப்பட்டுள்ளது என்றும் வரிப்பதிவேட்டில் update பதிவுகள் இல்லை என்றும் மேலும் மாநகராட்சியின் குப்பை

சேகரிக்கும் வாகனத்தில் செய்யப்படும் அறிவிப்புகள் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துகின்ற வகையில் அமைந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சியின் உதவி ஆணையர், உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வர் இருவரும் தங்களது வாக்குமூலத்தில் தூத்துக்குடி மாநகராட்சி, வார்டு எண் 43 பங்களா தெரு, கதவு எண்கள் 1, 1C. 2, 2A, 2B, 2B1, 2B2, 2C & 2D ஆகியவற்றிற்கான சொத்து வரி விதிக்கப்பட்டிருந்தது. மேற்கண்ட கதவு எண்களில் 2/1 என்ற வணிக கட்டடத்திற்கு சொத்துவரி சிறப்பு அறிவிப்பு வழங்கும்போது கணினியில் ஏற்பட்ட சிறு தவறு காரணமாகவும் எழுத்தரின் பிழையின் காரணமாகவும், மனுதாரரின் மண்டபத்திற்கு 4238 சதுர அடி என்பதற்கு பதிலாக 10,000 சதுர அடி என கணினியில் பதிவு செய்யப்பட்டு வரி விதிக்கப்பட்டு வந்தது. மனுதாரர் மேற்கண்ட தவறை சுட்டிக்காட்டியதன் பேரில் மேற்கண்ட தவறு சரி செய்யப்பட்டு மனுதாரரிடமிருந்து சரியான வரித்தொகையே வசூலிக்கப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளனர்.

தூத்துக்குடி மாநகராட்சி துணை ஆணையர் சொத்துவரி அறிவிப்பில் இடம்பெறும் வாசகங்கள் அடங்கிய அறிவிப்பு பெறுவதை கட்டிட உரிமையாளர்கள் தவிர்ப்பதற்கு சொத்துவரி மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய கால விபரங்கள் தெரிவிக்கப்பட்டு மனுதாரர், மன உளச்சலை தவிர்க்கும் பொருட்டு வரும்காலங்களில் முதல் அரையாண்டு சொத்துவரி தொகையினை ஏப்ரல் மாதத்திற்குள்ளும், இரண்டாம் அரையாண்டு சொத்துவரியினை செப்டம்பர் மாதத்திற்குள்ளும், செலுத்து வேண்டும் என மனுதாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் கட்டடத்தினை மாநகராட்சி இளநிலை பொறியாளர்(திட்டம்) அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர், உதவி வருவாய் அலுவலர், மண்டல உதவி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் (வ) அடங்கிய குழு பரிந்துரையின்படி ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று சரியான அளவு கணினியில் திருத்தம் செய்யப்பட்டு அதன் விபரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதுடன், 2022 சொத்துவரி பொது சீராய்வில் வணிக கட்டிடங்களுக்கு சதுரடி கணக்கிடாமல் 100 சதவீதம் 01.04.2022 முதல் சொத்துவரித்தொகை உயர்த்தப்பட்டுள்ளது குறிப்பிட்டு சொத்துவரி பொதுசீராய்வு சிறப்பு அறிவிப்பில் இருந்த சதுரடி பதிவானது 2003ம் ஆண்டு கணினி மயமாக்கும்போது ஏற்பட்ட தட்டச்சு பிழையே எனவும், கட்டிட அளவிற்கான மாதிரி சொத்துவரி கணக்கீட்டு படிவத்துடன் என மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் 30.01.2023 அன்று இதே பொருளிட்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்து, முறைமன்றம் நடுவம் விசாரணை முடித்து ஆணை பிறப்பிப்பதற்கு முன்பே மனுதாரர் 18.02.2023 அன்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இதே பொருளில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு எண். WP (MD) No.3592 of 2023 நாள்.22.02.2023 உத்தரவின்படி மாநகராட்சியால் எடுக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் மனுதாரருக்கு தெரித்ததுடன், தமிழ்நாடு அரசாணையின்படி தூத்துக்குடி மாவட்ட அரசிதழில் சொத்துவரி பொது சீராய்வு தெளிவுரைகள் வெளியிடப்பட்டு அதன் அடிப்படையில் பொதுசீராய்வு பணிகள் அனைத்தும் நிறைவுற்று பொதுமக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு மாநகராட்சியில் 30.03.2023ம் தேதிவரை வசூல் இனத்தில் மட்டும் (அரசு கட்டிடங்கள் மற்றும் வழக்கு நிலுவையில் உள்ள இனங்கள் தவிர்த்து) 2022–23ம் ஆண்டில் 82.28 சதவீதம் பொதுமக்களால் சொத்துவரி செலுத்தப்பட்டுள்ளது எனவும், மனுதாரரின்

பிரதான கோரிக்கையான சொத்துவரி நிர்ணயம் மற்றும் பொதுசீராய்வு தொடர்பு இல்லாத கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்ற விபரமும் 30.03.2023 அன்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும் மனுதாரர் Cont. P.(MD) No.970 of 2023 in WP(MD) No.3592 of 2023ன்படி நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தார். மாநகராட்சி வழக்கறிஞர் வழியாக நீதிமன்றத்தில் வாதிடப்பட்டு மாநகராட்சியின் நடவடிக்கைகள் அனைத்தும் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்கொண்டு கூடுதல் உத்தரவுகள் தேவையில்லை என நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை முடித்து 14.06.2023 அன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

நீதிமன்றம் தெளிவுபடுத்திய பின்னரும் 22.07.2023 அன்றைய தேதியில் இதே பொருளிட்டு W.P. (MD) No.18180 of 2023ன்படி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தற்போது மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கிற்கு மாநகராட்சி மூலம் சரியான சொத்துவரித்தொகையே நிர்ணயம் செய்து சொத்துவரி பொதுசீராய்வு செய்யப்பட்டுள்ள விபரத்துடன் வக்காலத்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு முதல் கட்ட விசாரணை துவக்கப்படாமல் நிலுவையில் உள்ளது.

மாநகராட்சியின் செயல்பாடுகள் நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பும் மனுதாரர் மீண்டும் மீண்டும் ஒரே பொருளிட்டு கோரிக்கையை வைத்து வருகிறார். இதனால் மாநகராட்சியில் உள்ள பணியாளர்களின் மனித உழைப்பு, நேரம் மற்றும் அலைச்சல் வீணடிக்கப்படுகிறது.

மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் முறையிட்டு தீர்வு காணும் முன்பு நீதிமன்றத்தை மூன்று முறை நாடியுள்ளார். நீதிமன்றத்தில் மேற்படி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட விபரங்கள் ஏதும் முறைமன்ற நடுவத்திடம் தெரியப்படுத்தவில்லை.

தற்போதைய தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 100 மற்றும் விதி 271ன்படி சொத்துவரியானது ஆணையரால் நிர்ணயம் செய்யப்பட்டது நிறைவடையாத நபரொருவரால் முன்னிடப்பட்ட மேல்முறையீடொன்றினைக் கேட்பதற்கு அல்லது முடிவு செய்வதற்கு மாநகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள வரிவிதிப்பு மேல்முறையீட்டு குழுவினை அணுக வேண்டும் என்பதால் மனுதாரர் முதல் கட்டமாக மாநகராட்சியின் வரிவிதிப்பு மேல் முறையீட்டு குழுவில் மனு செய்து உரிய தீர்வு மற்றும் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் வணிக கட்டடத்திற்கு மனுதாரர் கட்டிக்காட்டிய பின்னரே சொத்து வரி சிறப்பு அறிவிப்பு வழங்கும்போது கணினியில் ஏற்பட்ட சிறு தவறு காரணமாகவும் எழுத்தரின் பிழையின் காரணமாகவும் மனுதாரரின் மண்டபத்திற்கு 4238 சதுர அடி என்பதற்கு பதிலாக 10000 சதுர அடி என கணினியில் பதிவு செய்யப்பட்டு வரி விதிக்கப்பட்டு வந்த நிலையில் அந்த தவறு சரி செய்யப்பட்டு மனுதாரரிடமிருந்து சரியான வரித்தொகை வசூலிக்கப்பட்டு வருகிறது என தூத்துக்குடி மாநகராட்சி அலுவலர்களின் வாக்குமூலத்தில் இருந்து அறிய முடிகிறது. மாநகராட்சி அலுவலர்களின் இச்செயலுக்கு இம்முறைமன்றம் தனது கண்டத்தை பதிவு செய்கிறது.

இது எங்கனம் சரி செய்யப்பட்டது? எவ்வளவு தொகை கூடுதலாக வசூல் செய்யப்பட்டது? எப்படி அந்தக் கூடுதல் கட்டணம் சரி செய்யப்பட்டது? என்ற விபரங்கள் மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ளதா என்ற விவரம் சரிவரத் தெரியப்படுத்தவில்லை. The Thoothukudi Corporation is directed to take this observation into consideration when his appeal to the Committee is examined and disposed of on merits on both sides. Otherwise the petitioner may definitely move the Judicial Forum for appropriate remedy as could be safely inferred from the background and delineation of the issue. The Commissioner, Thoothukudi Corporation is directed to take this into account during final disposal.

2023–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள்27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. சு. சுப்பராமன்,
10/1, பக்கிள்புரம்,
தூத்துக்குடி – 628 003.

2) ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028

5) இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்